நாள் 11.02.2025

STC 811/2017

DW 1

பெயர் - கீதா

க/பெ.அமர்நாத்

வயது 40

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of February 2026.

(புகார்தரரர் நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை தொடர்ச்சி:-

4. கடந்த 2011ம் வருடம் செந்தில்குமார் என்ற நபரிடம் இருந்து என்னுடைய பெற்றோர்கள் கடன் வாங்கினார்கள் என்பதை நிரூபிக்க 22.09.2011 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவண எண். 4412/2011 என்ற ஆவணத்தின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்கிறேன். (ஆவண எண். 4412/2011 **எசாஆ 1** ஆவணமாக புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆவணத்திற்கு வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை வழக்கின் தரப்பினார்கள் ஆவணத்தின் தரப்பினர்கள் இல்லை என்ற ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

2. கடந்த 2014 ம் வருடம் செந்தில்குமரர் அவர்களுக்கு செக்யூரிட்டிக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தம் முடிவடைந்த காரணத்தினால் அந்த ஆவணத்தை கடந்த 26.05.2014 அன்று ஆவண எண், 2177/2014 ஆவணம் மூலம் ரத்து செய்யப்பட்டது. அதன் சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்கிறேன். ( 26.05.2014 தேதியிட்ட ஆவண எண்.2177/2014 கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் **எசாஆ 2** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது).

3. அதே சொத்தை கடனின் ஆதரவுக்காக எனது பெற்றோர்கள் மருதாச்சலம் என்ற நபருக்கு கிரைய ஒப்பந்த ஆவணம் செக்யூரிட்டிக்காக எழுதிக்கொடுத்தார்கள். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்கிறேன், ( 26.05.2014 தேதியிட்ட ஆவண எண். 2178/2014 கிரைய ஒப்பந்த ஆவணம் **எசாஆ 3** ஆவணமாக புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆவணத்திற்கு வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை வழக்கின் தரப்பினார்கள் ஆவணத்தின் தரப்பினாக்ள் இல்லை என்ற ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

4. கடந்த 07.04.2016 அன்று என்னுடைய பெற்றோர்கள் செந்தில்குமார் அவர்களிடம் வாங்கிய கடனை முழுவதுமாக கொடுத்துவிட்டபடியால் ஆவண எண். 1593/2016 மூலம் மருதாச்சலம் என்பவக்கு எழுகிக்கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. அதன் சான்றிட்ட

நகலை நான் தாக்கல் செய்கிறேன். 07.04.2016 தேதியிட்ட ஆவண எண்1593/2016 **எசாஆ 4** ஆவணமாக புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆவணத்திற்கு வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை வழக்கின் தரப்பினார்கள் ஆவணத்தின் தரப்பினர்கள் இல்லை என்ற ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை : (வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணைக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.